கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண். 44/2016

பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமூர்த்தி | தொழில் | |
| தகப்பனார் பெயர் | சிதம்பரம் | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 13.12.2024. |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

வாதி தரப்பு மனுவின்பேரில் பி.வா.சா.1 இன்று ஆஜராகி வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

எனது சொந்த ஊர் சென்னை. நான் சென்னையில் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். வாதிகள் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 1 மற்றும் 2 ஆவது சொத்துக்களை நானும் ஸ்ரீகரி என்பவரும் கிரையம் பெற்றுள்ளோம். எங்களுக்கு கிரையம் கொடுத்த ராஜேந்திரன் என்பவரையோ அல்லது அவரது குடும்பத்தினரைப்பற்றி கிரையத்திற்கு முன்பு தெரியாது. ராஜேந்திரன் என்பவருக்கு மேற்படி சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் ராஜேந்திரன் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அவரது தகப்பனார் சின்னான் செட்டியார் தானமாக கொடுத்த சொத்தாகும். ஈ.சி. பார்தது தான் வாங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்று எ.ம.சா.ஆ−5 என்பெயரிலோ ஸ்ரீகரி பெயரிலோ இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தை நான் கிரையம் பெறும்போது அசல் ஆவணத்தை கொடுத்துள்ளார்கள். அந்த அசல் ஆவணம் சின்னான் செட்டியாரும் ஆறுமுகம் செட்டியார்கள் எழுதிக்கொண்ட பாகப்பத்திரம் எ.ம.சா.ஆ−2 என்னிடம்தான் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தில் சின்னான்செட்டியாரும்,ஆறுமுகம் செட்டியாரின் தந்தை அழகர் செட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டு உள்ளது என்றால் சரிதான். சின்னான் செட்டியாருக்கு எத்தனை குழந்தைகள் உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் நான் கிரையம் பெறும்போது அது குறித்து தெரிந்து கொள்ளவில்லை. தான செட்டில்மெண்ட் ஆவணக்குறிப்பு மட்டுமே தெரிந்து கொண்டேன். சின்னான் செட்டியார், ஆரோக்கியசெல்வி, இளவழகன், மைனர் ராஜேந்திரன் ஆகியோர்கள் 27.01.1978 அன்று பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்துள்ளார்கள். அதை நான் 1 ஆவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தில் இளவழகன்

சொத்துக்களை பெற்றுக்கொண்டு கூட்டுககுடுமபத்தை விட்டு வெளியேறி விட்டேன் என்று சொல்லியுள்ளரா என்றால் இந்த ஆவணத்தில் உள்ள எழுத்துக்கள் என்னால் படிக்க இயலவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார்செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் 3 ஆவது பத்தியில் இளவழகன் தனக்கென்று தனியாக சொத்துக்களை பெற்றுக்கொண்டு குடும்பத்தை விட்டு வெளியேறிவிட்டார் என்று சொல்லியுள்ளேன். அந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. 1978 ம் வருடம் எனக்கு எத்தனை வயது என்றால் சுமார் 17 வயது. அந்தசமயத்தில் சின்னான் செட்டியார் குடும்பத்திலோ, இளவழகன் குடும்பத்திலோ, ராஜேந்திரன் குடும்பத்திலோ சொத்துக்கள் பிரிப்பது சம்மந்தமாக என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விபரம் எனக்குதெரியாது. இளவழகன் சின்னான்செட்டியாருடன் வசித்து வந்தாரா அல்லது அவரது தாயாருடன் வசித்து வந்தாரா அல்லது தனியாக வசித்து வந்தாரா என்று எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரிதான். 27.01.1978 ம் தேதியிட்ட பாகப்பத்திரமும் 1.04.1987 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரமும் பூர்வீக சொத்துக்கள்தான் என்றால் சரிதான். எங்களுடைய வழக்குப்படி 11.06.2003 ம் தேதியிட்ட ராஜேந்திரன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் பத்திரம் பதிவு செய்யும்போது சின்னான் செட்டியார் உயிரோடு இருந்தார் என்றால் சரிதான். 11.06.2003 அன்று ராஜேந்திரனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்கப் பட்டதாக சொல்லும் சமயத்தில் வழக்கிடை சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தும் கொடைக்கானலில் உள்ள கதெனரா வங்கியில் அடமானமாக வைக்கப்பட்டுள்ளது என்றால் சின்னான்செட்டியாரும் ராஜேந்திரன் என்பவரும் சேர்ந்து வைக்கப்பட்டதாகும். மேற்படி அசல் ஆவணங்கள் எ.ம.சா.ஆ–9 ன்படி 30.04.2013 அன்றுதான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் ஆவணங்களே இல்லாமல் மோசடியாக ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணத்தின்படி நான் கிரையம் பெற்றது செல்லாது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தின்படி நானும் ஸ்ரீகரனும் வழக்குச்சொத்தை எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றோம் என்றால் ரூ.29,50,200/–ஆகும். மேற்படி தொகை கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்ட போதுதான் கொடுககப்பட்டது என்றால் சரியல்ல. சிறிது சிறிதாக முன்பாகவே கொடுக்கப்பட்டுள்ளது. 13.10.2014 ம் தேதியிட்ட எ.ம.சா.ஆ 6 மற்றும் 7 ல் கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்டபோதுதான் ரொக்கமாக பணம் கொடுக்கப்படதாக காணப்படுகிறது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.8 ஐ 22.09.2014 அன்று எழுதப்பட்டது என்றால் சரிதான். அதில் முன்பணமாக பத்துலட்சம் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அதில் ராஜேந்திரன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். அதற்கு கீழே 07.10.2014 அன்று ரூபாய் ஐந்து லட்சம் கொடுக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு கீழே

காண்பிக்கப்பட்டுள்ளது. அதை எழுதியது நான்தான். அதற்கு ஒப்புதல் தெரிவித்து ராஜேந்திரன் கையொப்பம்செய்துள்ளாரா என்றால் இல்லை. வழக்கிடை 1,2 சொத்துக்கள் குறித்து ராஜேந்திரன் என்பவர் குமரேசன் என்பவரிடம் கிரைய உடன்படிக்கை செய்தது தெரியுமா என்றால் அது கேன்சல் செய்யப்பட்டபிறகுதான் நான் வாங்கினேன். எ.ம.சா.ஆ–10 அந்தகிரைய ஒப்பந்தம் எத்தனை ஆண்டுகளுக்கு போடப்பட்டது என்று தெரியுமா என்றால் 2 வருடங்களுக்கு என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதை 3 மாதங்களிலேயே கேன்சல் செய்யப்பட்டுள்ளது என்றல் சரிதான். அது பூர்வீக சொத்து என்பதால் குமரேசன் என்பவருக்கு தெரியவந்து அவர் வாங்க மறுத்ததால் அது ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 22.06.2015 அன்று வாதிகள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார்கள். அந்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் , அந்த அறிவிப்பு எனக்குதாமதமாக கிடைத்தது. அதன்பின்னர் பதில் அறிவிப்பு அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இளவழகன் என்பவர் சின்னான் செண்டடியாரின் மூத்த மகன் என்பது எனக்கு வழககிடை சொத்தை வாங்கிய பிறகுதான் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் இளவழகன் கூட்டுக்குடும்பத்தை விட்டு வெளியேறி விட்டார்என்ற விபரம் எனக்கு தெரியாது. இளவழகன் அவரது பெற்றோருடன்தான் இருந்தார் என்றும் அவர் கூட்டுக்குடும்பத்தை விட்டு வெளியேறி விட்டார் என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் விசாரித்து தெரிந்து கொண்டேன் 1978 ம் ஆண்டில் சொத்துக்களை பிரித்துககொண்டு இளவழகன் வெளியேறிவிட்டார் என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். அவ்வாறு விசாரித்து தெரிந்து கொண்ட விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1978 ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் காணப்பட்ட சொத்துக்களும், 1987 ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் காணப்பட்ட சொத்துக்களும், வெவ்வேறானவை என்றால் சரிதான். இரண்டு பத்திரத்திலும் உள்ள சொத்து்க்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். இந்த வழககில் என்னிடம் வாதிகள் பாகப்பிரிவினை ஏதும் கேட்டுள்ளார்களாஎன்றால் கேட்கவில்லை. ஆனால் எனது கிரையம் செல்லாது என்று விளம்புகை செய்க்கோரி கேட்டுள்ளார்கள். அதனால் பாகப்பிரிவினை கேட்க இயலாது என் று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்துக்கள் ஆதியில் அழகர் செட்டியார் என்பவபருக்கு பாத்தியப்பட்டு அவரின் சட்டப்படியான வாரிசான சின்னான் செட்டியார்என் பவரின் மகன் இளவழகன் என்பவருக்கு சேர வேண்டிய பாகம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. நானும் ராஜேந்திரன் என்பவரும்கூ ட்டுசேர்ந்து வாதிகளுக்கு பூர்வீக சொத்தில் சட்டப்படி கிடைக்கக்கூடிய பாகத்தினை கிடைக்க விடாமல் மலரணையாக 13.10.2014 ம் தேதியிட்ட 2 கிரைய ஆவணத்தை பதிவு செய்துள்ளோம்என்றால்சரி யல்ல. பூர்வீக

**சொத்துக்களில் சின்னான்செட்டியார் என்பவர் கூட்டுப்பங்குதாரான இளவழகன் என்பவரின் பாகசொத்துக்களையும் சேர்ந்து தான செட்டில் மெண்ட்எழுதி வைக்க உரிமைபடைத்தவர் அல்ல என்றால் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக நான் கிரையம் பெற்ற மற்ற 2 ஆவணங்களும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2024.12.16 13:10:28 +0530

Additional District Judge(FAC),

Dindigul.